©
தமிழ்நாடு அரசு
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 37] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 17, 2025
புரட்டாசி 1, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18 ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண். 42/2025.**

**1923 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் VII/1923. 2. 1923 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (இதன் பின்பு இதில், முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (a) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(a) மனச் சீர்கேடுற்றவர்;”.

3. முதன்மைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “அல்லது காது கேளாத - வாய் பேசாதவர் அல்லது தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்” எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 40–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

37—IV-2-(T-Sup)—1